உ

இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௩] யாழ்ப்பாணம்:- கர வருஷ தை மீ ௩ உ வெள்ளிக்கிழமை (18 ஜனவரி 1952) [இல - ௭௭]

புனையற் பெயர்மொழி

ஒப்பிலா நாவலர் பெருந்தகையின் உள்ளக் கிடக்கை

கற்றனைத் தூறிய அறிவுக் களஞ்சியம்

வித்தியா விருத்திக்காக விரதம் பூண்ட வித்தகர்

கலை வளர்க்கக் கடுந்தவமிருந்தார் கட்டுரை

சைவத்தையும் தமிழையும் தன் உயிராகக் கருதித் தருமோபகாரியாகத் திகழ்ந்த இப்பொழுதும் எப்பொழுதும் சைவ நன்மக்கள் உள்ளத்திற் றிகழ்கின்ற திகழவிருக்கின்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் உள்ளக்கிடக்கையை வசனநடை கைவந்த வல்லாளரின் ஆற்றொழுக்கனைய அரிய மொழிகளில் பழஞ்சொற் புதுப்பிக்கும் நெறியில் இங்கு தருகின்றோம்.

வீரவாழ்க்கையின் விழுமிய குறிக்கோளைப் பாருங்கள்!

சமயத்துக்கும் தாய்மொழிக்கும்ஆக இல்வாழ்க்கைபுகா இருடியின் இருதயத்தை ஆராயுங்கள்

தருமம் சாமானிய தருமமெனவும் விசேஷதருமமெனவும் இருவகைப்படும். சாமானிய தருமங்களாவன பெரும்பான்மையும் எல்லாச் சமயத்தாருக்கும் ஒப்ப முடிந்தனவாகிய கொல்லாமை, பிறர் பொருள் வெளவாமை, கள்ளுண்ணாமை, பிறர் மனைவியரை விரும்பாமை, வரைவின் மகளிரை விரும்பாமை, பொய் சொல்லாமை, இரக்கம், செய்ந்நன்றிமறவாமை, நடுவுநிலைமை, கொடை, தாய்தந்தை முதலிய பெரியோரைப் பேணல் முதலியனவாம். விசேஷ தருமங்களாவன அந்த அந்தச் சமயத்துக்கு உரிய தருமங்களாம். யாதாயினும் ஒரு சமயத்தின் வழி ஒழுகிப் பயன் பெற விரும்புவோர் சாமானிய தருமங்களெல்லாவற்றையும் தழுவிக்கொண்டே தமது சமயத்துக்குரிய விசேஷ தருமங்களை அனுட்டித்தல்வேண்டும். சாமானிய தருமங்கள் இல்லாவிடத்து விசேஷ தருமங்கள் சிறிதும் பயன்படாவாம. இதுவே எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு.

தருமங்கள் இவையெனவும் அவைகளைச் செய்யும் முறைமைகள் இவையெனவும் அவைகளாற் பெறப்படும் பயன்கள் இவையெனவும், அறிவிக்கும் நூல்களைக் கற்றல் கேட்டல் செய்யாவிடத்து, அந்தத் தருமங்களை அறிதலும் செய்தலும் இயலாவாம. ஆதலினாலே கல்விகேள்விகளை விருத்தி செய்தல், எல்லாச் சமயத்தாருக்கும் இன்றி அமையாத கடனாகும்.

ஊர் தோறும வித்தியாசாலை தாபித்துப் பிள்ளைகளுக்குக் கருவி நூல்களையும சைவசமய நூல்களையும கற்பித்தலும், கற்றவர்களும் கல்லாதவர்களுமாகிய எல்லாருக்கும் பயன்படும் பொருட்டுச் சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் சைவசமயத்தைப் பிரசங்கிப்பித்தலும், உத்தமோத்தம புண்ணியங்கள் என்று நம்முடைய சைவநூல்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது. சைவசமயம விருத்தியாதற்குக் கருவிகள் இவையே. சைவசமயத்தை விருத்தி செய்யுங் கடமை பூண்டு அதற்கே உரிய திரவியங்களுக்குத் தலைவர்களாய் இருப்பவர்கள் எவர்களோ அவர்கள் இவைகளைச் செய்யாது தங்கள் காலத்தையும் சமய விருத்திக்கு உரிய திரவியத்தையும் வீணாகப் போக்குகின்றார்கள். நம்முடைய சைவ சமயப் பிரபுக்களோ இவ்வுண்மையை அறிந்தும் இவர்களைத் திருத்துதற்குச் சிறிதும் முயலாதிருக்கின்றார்கள். அன்னிய தேசங்களிலுள்ள அன்னிய சமயத்தார்கள் தங்கள் தேசங்களினின்றும் நம்முடைய தேசங்களிலும் புகுந்து, ஊர்தோறும வித்தியாசாலைகளைத் தாபித்து, மற்றை நூல்களோடு தங்கள் சமய நூல்களைப் படிப்பித்துக் கொண்டும், தங்கள் ஆலயங்களிலும் மற்றை யிடங்களிலும தங்கள் சமயத்தைப் பிரசங்கித்துக்கொண்டும் வருகிறார்கள். இதைக் கண்டும நம்முடைய சமயாசாரியர்களும் கோயில் அதிகாரிகளும் பிரபுக்களும தங்கள் கடமையை நடத்துதற்குச் சிறிதாயினும முயற்சி செய்யாதிருக்கின்றார்கள். ஆதலினாலே நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகிறது. இதனை நான் என் சிறு வயசு முதலாகச் சிந்தித்துச் சிந்தித்து 'சைவசமயத்தை வளர்த்தற்கு வேண்டும முயற்சிகளைச் செய்வாரிலரே! இதற்கு யாது செய்யலாம்! [illegible] வருந்தி [illegible] பேராசையை அதனை முடித்தற்குச் சிறிதும் சத்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான் சத்தியுடைய மற்றையோருக்குக் கொடுத்தருளினாரில்லையே' என்று இரவும் பகலும் பெருங்கவலை கொண்டு பெருமூச் செறிதலும் பலருக்குப் பிறத்தலுதவினுமே பெரும்பான்மையும் என் காலத்தைப் போக்குவேனாயினேன். நான்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

சாவகச்சேரி நகரசங்கம்

சர்வசம்மதத் தலைவர் தெரிவு

சாவகச்சேரி நகர சங்கத் தலைவராகத் திரு N. அருணசலம் ஆசிரியரும் உபதலைவராகத் திரு V. கனகசபை வழக்கறிஞரும் சர்வ சம்மதமாகச் சென்ற செவ்வாய்க்கிழமை நடந்த சங்கக் கூட்டத்திற் தெரிவு செய்யப் பெற்றார்கள்.

நகரசங்கங்களுக்கும் கிராமச் சங்கங்களுக்கும் இது ஒரு சிறந்த முன்மாதிரியாயிருக்கும் என்று நம்புகின்றோம்.

மாணவர்க்கு மத்தியான போசனம்

வியாவிற் சைவ பரிபாலன வித்தியாசாலையில் 12-1-52 இரவு 7 மணியளவில் பெற்றார் சங்கக் கூட்டம் நடைபெற்றது. யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் திரு. பொ. நவரத்தினம் அவர்கள் தலைமை வகித்தனர். அத்தருணம் தலைவரும் தலைமையாசிரியரும் இருநேரப் பாடசாலையாக நடத்த வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பெற்றோருக்கு எடுத்துரைத்தனர் ஆசிரியர் திரு வி. துரையப்பா அவர்களும ஆசிரியர் M. A. கந்தையா அவர்களும் மத்தியான போசனத்தின் பொருட்டு அரசாங்கத்தார் கொடுக்கும உதவிப் பணத்துடன் பெற்றோரும் பிள்ளைகளுக்கு மத்தியான போசனங் கொடுப்பதற்கு உதவி செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி எடுத்துரைத்தனர்.

வீரச் செயல்

நியுயோர்க் நகரத்திலுள்ள வைத்தியர்கள் ஒரு நோயாளனுடைய தேகத்திலிருந்த முழு இரத்தத்தையும 72 மணித்தியாலங்களுள் மூன்று முறை மாற்றியமைத்து அந்த நோயாளனை உயிருடன் வைத்திருந்தனர்.

அம்மை நோயால் மரணம்

அம்மை நோய் வாய்ப்பட்டு அரசாங்கத்தாரால் ஊர்காவற்றுறைத் தொற்றுநோய் வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்டிருந்தவர்களுள் ஒருவர் இறந்தாரென அறியவருகிறது.

பூரண சூரிய கிரகணம்

நிகழும் கரவருஷம் மாசிமீ 13 உ (25.2.52) பூரண சூரிய கிரகண முண்டாகுமென்று கூறுகின்றனர். எங்கள் பஞ்சாங்கங்களுமப்படியே காண்பிக்கின்றன. ஆனல் இலங்கையில் இது தோற்றுதென்பது ஒருசாரார் கருத்து.

உ

இறப்பும் இல்லார் பிறப்பு இலார்

காணிலார் கருத்தில் வாரார் திருத்தலார் பொருத்தலாகார்
ஏணிலார் இறப்பும் இல்லார் பிறப்பிலார் துறக்க லாகார்
நாணிலார் ஐவரோடும் இட்டெனை விரவி வைத்தார்
ஆணலார் பெண்ணும அல்லார் அதிகைவீ ரட்டனரே.

அரசியல் அலை

அரசகுடும்பத்தினர் வரவு அமர தரிசனமா?

கொழும்புமா நகரிற் குதூகலம்!

குக்கிராமங்களிற் கொடும் பசிப்பிணி!!

விருந்தினரை உபசரித்தல் தமிழ் மரபு. உலக ஒழுக்க முறையும் அதுவே. அளவு கடந்தால் அமுதமும் ஆலம் என்பார்கள். அரச குடும்பத்தினரை இலங்கை அரசாங்கமும் குடிசனங்களும் வரவேற்க வேண்டியது நல்லொழுக்கக் கடமை. ஆனல்.... 'அமர தரிசன'ம் என்று எண்ணிப் பாத பூசை செய்யவேண்டுமா? கோடானுகோடி செம்பொன் கொட்டி அழிக்கவேண்டுமா? என்றெல்லாம்பல கேள்விகள் எழுகின்றனவே!

புற நாட்டார் ஆட்சியிற் பன்னூற்றுக் கணக்கான ஆண்டுகள இத்தீபகம் அடிமையாயிருந்தபொழுது அரசிளங்குமரன் முதலியோர் வருகை ஆடம்பரமாகக் கொண்டாடப்பெற்ற அக்கால அரசியல் நிலைக்குப் பொருத்தமானதே. அடிமைத் தளை நீங்கி ஆண்மைத்தனம பெற்ற எங்கள் நாட்டில் அக் காலத்திற் போன்று இக் காலத்திலும் அரச குடும்பத்தினரை வரவேற்கும் முறையில் அளவு கடந்த ஆடம்பரமும் ஆரவாரமும் காட்டுதல் பாய்வதற்குப் பதுங்கிக்கிடக்கும் பொதுவுடைமைப் புலிகளுக்குத் தக்க தருணத்தை அளிப்பதாகவிருக்கும்.

உலகத்திற் பசியும் பிணியும் தீர்ந்தபாடில்லை யாகையாலேயே புரட்சிக்காரர்கள் தலைநிமிர்ந்து நின்று ஏழைகளை ஏமாற்றக்கூடியதாயிருக்கின்றதென்று அரசியல் வாதிகள் சொல்லுவதை அறிந்தும் பணத்தையும் சிரமத்தையும் எல்லையற்ற விதத்திற் செலவு செய்தல் தீவிர வாதிகளை வரவழைத்தல் போன்றிருக்கின்றது.

புரட்சிப் புலிக்கு வேட்டையா?

பொதுத் தேர்தல் புறங்கொல்லையில் வந்து விட்டது. பொதுசனங்கள் அரசியற்கட்சிகளின் அலுவல்களை அவதானித்த வண்ணமாகவே இருக்கின்றார்கள். பாரதநாட்டிலே இதுவரை தலைநிமிர முடியாது ஒதுங்கியிருந்த புரட்சிக் கட்சியினர்கள் தேர்தற் போரிலே தைரியங்காட்டத் தொடங்கிவிட்டார்கள் என்பதை எங்கள் அரசியல் வாதிகள் அறிந்தும அறியாதார்போன்று எங்கள் நாட்டிலும் புரட்சிக் கட்சியினருக்குப் போதிய வசதிகள் அளிக்கக்கூடிய இவ் வேடிக்கை விளையாட்டுகளை ஆதரிப்பது மாத்திரமல்லாமல் ஆகத்தக் கோடி பொன்னை வீண்விரயஞ்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க அந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே

இந்துசாதனம்

யாழ். கர ஹூ தை மீ
௫ உ வெள்ளிக்கிழமை

நினைவுகூரவேண்டியது யாரை?

பிறந்தநாள், மணவினை புரிந்த நாள், இறந்த நாள் இன்னபிற நாட்கள் இன்றைய உலகில் எங்கும் குதூகலமாகக் கொண்டாடப்பெறுவதை எவருமறிவர். சுருங்கச் சொல்லுகில் ஞாபக தினங்கள் அநுதினமும் கொண்டாடப்பெற்றே வருகின்றன. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ என்றாங்கு தினங்களெல்லாம் மாபெருந் தினங்களா? விழாக்களெல்லாம் திருவிழாக்களா? என்ற வினவொன்றெழுகின்றது. யார் யாரை மக்கள் உத்தமமாக நினைவுகூர வேண்டியது என்று ஆராயுமிடத்து வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்து பிறர்க்குபகாரிகளாக விருந்த பெரியார்களை மறவாமைவேண்டுமா? அன்றி இறந்தாரெவரையும் நினைவுகூரவேண்டுமா? என்றால் பின் கூறப்பட்டோரைப் பிதிர்கர்மம் செய்யுமுரிமையுடையார் நினைந்தே தீரவேண்டும். ஆனால் முன் கூறப்பட்டவர்களுக்குப் பிதிர் கடன் செய்யவேண்டியவர் அகில உலக மக்களுமே என்ற ஞானக்கொள்கைமுறையில் யாவரும் அவர்களை ஞாபகப்படுத்த வேண்டியதுதான் முறையாகும்.

“நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத், தீசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத், தேசம் உய்யத் திருத்தொண்டத்தொகை முன் பணித்த திருவாளன், வாச மலர் மென்கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்” என்று சேக்கிழார் அடிகள் நயம் பொலிய நவின்றாங்கு எல்லா உயிரும் தொழ எடுத்த ஈசன் அடியார் பெருமையினைத் தேசம் உய்ய ஒரு பணி செய்தல் பெருந் தொண்டாதல் காண்க.

நேற்றைய தினம் சிவத்துரோகஞ் செய்த தந்தையின் காலைச் சிவனருளாற் றுணித்துச் சண்டேசுரப் பதமபெற்ற அடியார் திருநாள். அன்னாரின் தொண்டிற் பசுநிரைகளுக்குச் செய்த பெரும் பணியின் மகத்துவத்தை இக்காலத்துள்ளார் அனைவரும் அறிதல் அத்தியாவசியகம். அது போன்று ஏனைய திருத்தொண்டர்களின் வாழ்க்கை நயங்களை அவ்வவர் திருநாட்களில் எடுத்து உலகறியச் செய்து தேசம் உய்ய வைத்தல் சைவ அன்பர்கள் கடமையாகும்.

ஏனைய நினைவு நாட்கள் போலல்லாது இத்திருநாட்கள் மனம் வாக்குக் காய சுத்தியுடன் போற்றப்பட வேண்டியன. இப் பணியைச் சைவ பரிபாலன சபையும் ஏனைய சைவ சங்கங்களும் ஆற்றி வருகின்றனவெனினும், பல்லோரும் பயன்படும்பொருட்டு, அத் தினங்களிற் பகிரங்கக்கூட்டங்கள் பட்டினங்களிலும் கிராமங்களிலும் நிறுவித் துண்டுப் பத்திரமூலம் தொண்டர்களின் பணியின் சிறப்புக்களையும் அவற்றை இக் கால உலகில் எவ்வாறமைத்துக்கொள்ளலாமென்பதையும் சுருங்கச்சொல்லி விளங்க வைத்து, யாவரும் பயன்படச் செய்வது விரும்பக்கூடியதொன்றன்றோ!

மின்னினும் நிலைமையில்லா விழுப்பொருள்

வாதவூரெங்கோன் வழுத்திய ஞானச் செம்பொருள்

“மின்னினும் நிலைமையில்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன் — உன்னடியடைந்து நாயேனுறுபவமொழித்தல் வேண்டும்” என்பன மணிவாசகப் பெருமான் கூற்றுரையையும் புராணச் செய்யுளடிகள். இவற்றில், மின்னினும் நிலைமையில்லா விழுப்பொருள் என்பது ஈண்டு சிந்திக்கப்படுவது. புதினம், பொழுதுபோக்கு, புது வாழ்க்கை முறைகள் முதலிய துறைகளில் வெளிவருவனவே இக்கால மக்கள் உவந்து வாசிப்பதற்குரியவாகின்றன. இவையெல்லாம் இந்துசாதனத்திற் காணலாம். சமயங்களெல்லாவற்றுக்கும் தாயகமாகித்தனிச் சிறப்புடன் விளங்கும் சைவ சமயம்போல, உலக இன்பத் துறைகளிலும் வேண்டியவாறு தந்து நிலையான பேரின்ப வழிகாட்டும் சைவ வாழ்க்கையின் தனிச்சிறப்பை விளக்குவது இந்துசாதனத்தின் இரு பெருங் கடனாய் அமைந்துள்ளது. இதனாலேயே ஆண்டுதோறும் சைவமக்கள், தம் கோவில்களில் தனி விருப்பிப் படிக்குந் திருவாதவூரடிகள் புராணத்தின் செம்பொருள் விளக்கம் முன்னர்த் தொடங்கின நாம் அதை ஈண்டுத் தொடர்ந்து செல்லுந் தொண்டை மேற்கொண்டேம்.

விழுமிய பொருள் இதுவென்பது

மின்னலினும நிலையில்லாததேயெனினும் அது விழுப்பொருள் என்பது ஒருபுடை. விழுப்பொருள், விழுமிய பொருள சிறந்த பொருள் என்று இங்கு இப்பொழுது கொள்ளப்படுகின்றது. எக் காரணத்தினால் அது அத்தன்மைத்தெனக் காண்போம்.

மக்கட் டொகுதியினராகிய நாம், பரம்பரை பரம்பரையாய்ப் பல பொருட்களுடையாராய் வாழுகிறோம் வாழுவோம் என்று எண்ணுவதே வழக்கம. ஞானம் மோனம் என்பவை எல்லாம் வாய்ப்பேச்சிலன்றி வாழ்க்கையில் இல்லை. எம் உடல்களையே நாம் என்று நினைத்து வாழுவோம். இறந்துபடுவோரை நாள்தோறுங் கண்டும் எமனென்பது எமக்கில்லை என்பார்போல் இறுமாந்து செல்வோம். இதுவே வழக்கம். ஆயினும் இறைவன் திருவருள்வழி இடர் தொடர்ச்ச நேரத்தில் இது என்ன என்று எண்ணுவது முண்டு. இந்த நேரத்தில் மாத்திரந்தான உள்ளதை உள்ளபடி காண மனம் ஒருப்படும். இவ்வாறு காண உதவியாய் நிற்பதும் இவ்வுலகப் பொருட்களேயாம். இதை விளக்கவே “மிடிவாமளவும் விளக்கனைய மாயை — வடிவாதி கன்மத்து வந்து” (திருவருட்பயன்) என்னுந் திருவாக்கெழுந்தது. மாயையினலாகிய தனு கரண புவன போகங்கள் ஆன்மாக்களுடைய புண்ணிய பாவங்களுக்குத் தக்கவையாய்த் தோன்றி, விடியும்வரையும் இருளை ஒருவாறு நீக்குகின்ற விளக்கைப்போல, ஆன்மாவானது சிவஞான ஒளியைப் பெற்று முத்தியடையும் வரையும், ஆணவ இருளை ஒருவாறு நீக்குகின்ற அறிவைக் கொடுக்குங் கருவிகளாகின்றன என்பது இதன் பொருள். “ஆணவத்தோடத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத் தாணுவினோடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ” என்னுந் தாயுமான சுவாமிகள் திருவாய்மொழிகள் இங்கு உற்று நோக்கத் தக்கன. இயல்பாகிய ஆணவத்தோடு பிரிப்பின்றி (இருண்மயமாய்க் கிடந்தபடி நாம சிவ ஞானமயமாகிய ஒளியோடு பிரிப்பின்றி ஒளி மயமாய் நிற்பது

தொடர்ச்சி 3-ம் பக்கம்

விறிசிட்டி
சிவகுருநாதசுவாமி கோவில்
உற்சவம்

நிகழும் கர வருடம் தை மீ 9 உ (22-1-52) செவ்வாய்க் கிழமை உற்சவம ஆரம்பமாகித் தை மீ 23 உ (5-2-25) செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

திருத்தொண்டர் திருநாள்

தந்தையின் சிவாபராதம் தாங்காத தனயன்

சண்டேசுரப்பதம் பெற்ற தனிப் பெருநாள்

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப
னாக்கி “அனைத்து நாம்
உண்ட கலமும் உடுப்பனவுஞ் சூடுவனவும்
உனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோம்” என்றங்கவர்
பொற்றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை
வாங்கிச் சூட்டினார்

வந்து மிகைசெய் தாதை தாள் மழுவால் துணித்த
மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்
இந்த நிலைமை அறிந்தாரார் ஈறிலாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றோ
சாற்றுங்கால

(சண்டேசுர நாயனர் குருபூசைத் தினம் நேற்று நிகழ்ந்தது)

பிராமணராகப் பிறந்து, இறைவனுக்காம் பஞ்ச கௌவியங்களைத் தரும் புண்ணியப் பசுவை இடையனொருவன் கோல் கொண்டு துன்புறுத்தினனென்று அன்று தொடங்கி இடையனாகப் பசுநிரைகளைக் காப்பாற்றிய சண்டேசுரர் பெருநாளை, பசுவைக்கொன்று பசிநீங்கப்புசிக்கின்ற, ஏனையோர்க்கு உணவுக் குதவுகின்ற மாபாதகப் புலைமை கூடிக்கூடி வரும் கொடிய காலமாம் இக்கட்டிலே, ஆர்வத்தோடும் அபிமானத்தோடும் கடைப்பிடிப்பது மிகமிக வேண்டற்பாலது.

தொடர்கதை

இன்பத்தின் நிலை இதுதானு?

‘இறை ஒளி’

6

பங்கஜங் கண்டகனவுபகற்கனவு அல்ல. நித்திரைக்குப் பாதகாவலனாகிய கனவே. எழுதவன் இதயத்தில் ஒரு பெரும் விவாகம் எழுவதாயிற்று.

என்ன! ஓவியத்தின் உருவமே என்று ஆசிரியர் என்னை அழைக்க வேண்டிய காரணம்! இது அவரது உரு வெளித் தோற்றமா? என்னை ஓவியம் என்றால் இதுவரை இவர் ஓவியம் அறியாரா? அதுதான் போகட்டும், அன்று “பங்கஜா! உன் பாட்டுத் தேவகானமபோலல்லவா தெவிட்டிற்று’ எனக் கூறினரே ஆசிரியர். இது என்ன ஆச்சரியம்! கானம் என்பது இன்னமும் தெரியவில்லையா இவருக்கு. இசைக்கலை ஆசிரியராகிய இவர் இப்படி வர்ணனை சொன்னால் ஓலைக்குழலைப் புல்லாங்குழல் என்று சொல்லிவிடுவரோ!

இல்லை... இதற்குக் காரணம இருக்கத்தான் வேண்டும். முன் அறியாத என்னை முகமன் கூற வேண்டிய அவசியம் எதுவும் இல்லையே.

கனவு கனவாய் இருக்கட்டும்

அதுமாத்திரம? உன்னை நான் இசை இராணி ஆக்கி வைப்பேன், என்ன விநோதம் இசை என்ன என்று அறிய முன்னரே இசைக்கு இறைவியாய் நான் வரவும் அல்லது அந்த அரச மகிமையை எனக்கு எவராவது அளிக்கவும் கூடுமா? அப்படியாயிருந்தால் இது ஒரு மாய உலகந்தானு!

ஆம், அறிவேன! நான் அறிவேன் என்று பங்கஜமும் அவளது உள்ளமும் வட்டமேசைமகாநாடு நடத்துகிறார்கள். மனஞ் சொல்லுகிறது: என்ன இது நூதனமா. ஆசிரியர் உன்னை ஆட்கொண்டுவிட்டார்! என்ன!! இது தப்பாய் விட்டதே. என்கிறாள் பங்கஜம். ஆட்கொள்ளுதல் என்றால்... நான் அடிமையா! கனவு கனவாய் இருந்துவிட்டால நன்று.

மனம் விடுமா? தொடர்ந்து சொல்லுகின்றது. படித்தவண்ணமே என்பதை நீயறியாயா! ஆசிரியர் உள்ளம் படித்து விட்டது அவ்வளவுதான்.

ஆ, இது நன்றாயிருக்கின்றது நான் என்ன குழந்தையா? என் அப்பாவுக்கு நான் கொடுத்த வாக்குப் பொய்க்குமா? கலை பயிலச் சென்று கலை பயின்றதாய் முடிந்துவிடப்போகின்றதா மனம ஒரு உபாயஞ் சொல்லுகின்றது. என்ன தடுமாற்றம் இருந்து பார்க்க வேண்டாமா, பழகப் பழக எல்லாம் பழங்கதையாய் விடும இவ்வளவில் பொழுது விடிந்தது.

அதே இரவு பங்கஜத்தின் வகுப்பிற்கடுத்த வகுப்பில் உள்ள பகவதியென்பாள் பங்கஜத்தைப்போன்ற நிம்மதியற்ற நித்திரையையடைந்த படியிருந்தயர்ந்தவண்ணம் கனவு கண்டவள் கதறினள். குமாரன் ஆசிரியர் மனோன்மணியை மனைவியாக அறிந்தான்போன்று மயங்கினன். ஓவியத்தின் உருவமே என்று ஆசிரியர் அவளைச் சொன்னது நான் அருவமா, அல்லது பாவியின் உருவமோ? நாளுக்கு நாள் கண்டுவந்த மலர் முழுதமானுலும் அமுதமாகாது. நேற்றெனத் தோன்றியது அலரிப் பூவானுலும் உரோசாவாய் விடுமே. கண் கண்ணை ஏமாற்றினுல்! காண்பது மாயமே.

பிள்ளையார் பிடிக்கக் குரங்கானதா?

‘உன்பாட்டுத் தேவகானம் போலல்லவா தெவிட்டிற்று’ என்று சொல்ல ஆசிரியருக்கு அவ்வளவு பித்தம தலைக்கேறிவிட்டதா, வான் கோழியை மாமயில் என்று சொல்லும் மாருட்டம் வந்துவிட்டதா ஆசிரியருக்கு. உன்னை இசை இராணி ஆக்கிவைப்பேன் என்று சொன்னர். அந்தோ இது பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் விட்டதே. இதுவரை என் உள்ளக்கிடக்கையைத் தெரியாதுவிட்டது தவறு. என் மனம நிறைந்த மணாளன் இவரே என்று எண்ணினன். எண்ணி ஏமாந்தேனே! நம்பி இப்படி ஏமாந்தேன். அழகுக்கு அரசன், இசைக்கு இறைவன் இவர் என்று நான் மனக்கோட்டை அமைத்த எண்ணமெல்லாம் மண்ணில மாய்ந்ததே! நானு இன்னொருத்தி இசை அரசியாக வருவதைக் கண்டு பொறுத்திருப்பது ஒருபோதும் முடியாது. பேதை மதியாற் பிழைத்துவிட்டேன், இனிப் புத்தியாய் நடப்பேன் என்று துடிதுடித்தெழுந்த பகவதி, கனவல்ல உண்மையாதா இருப்பதை உணர்ந்து ஆசிரியரையும் பங்கஜத்தையும் அவதானிக்க ஆரம்பித்ததுமல்லாமல் எவ்விதமும் தன் ஆசிரியரை மணந்து

தொடர்ச்சி 3 - ம்பக்கம்

இன்பத்தின் நிலை இதுதானா?

2-ம் பக்கத் தொடர்ச்சி

விட வேண்டுமென்ற எண்ணமும் வீறுகொண்டது.

மூன்றாம் நாள் பங்கஜம் கல்லூரிக்குப்போக அரைமணித்தியாலம் சென்றுவிட்டது. ஆசிரியர் ஏதோ மறந்து நிற்பார்போன்று அரைமணித்தியாலமும் கல்லூரியை ஆரம்பியாது அங்கு மிங்குமாய் நடந்து திரிவதைக் கண்ணுற்ற பகவதி நிலைமையை நிதானிக்கத் துணிந்தாள். சென்றாள் ஆசிரியரிடம். இன்று பாடமெல்லாம் ஆயத்தம் அச்சுபாட்டைப் பழகலாமா என்று மெல்ல வினவினாள். கேட்டும் கேளாதார் போன்று, குமாரன் ஆசிரியர் பார்க்கலாம் என்று வெட்டிப் பேசினதுதான் பகவதி உள்ளம் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. திரும்பிச் சென்று வகுப்பினுட்கார்ந்து ஆழ்ந்து செயப் படம்போட ஆரம்பித்தனள்.

(தொடரும்)

தேவை

கொழும்பில் ஓர் சைவக் கோயிலுக்கு நன்றாக வாசிக்கத் தெரிந்த நடுத்தர வயதுடைய பிராமணக் குருக்கள் தேவைப்படுகிறது. மற்றும் விபரங்களுக்கு விரும்புவோர் எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்
தருமகர்த்தா
நீ 38 கொட்டபோம் தெரு
கொழும்பு—13

M. 176 8, 15, 18—1—52.

மின்னினும் நிலைமையில்லா விழுப் பொருள்

2-ம் பக்கத் தொடர்ச்சி

எந்நாவிலாகுமோ என்கிறார். இதனால், முனையொரு ஞான்று அறிவு விளக்கம் சிறிதுமின்றிக் கிடந்தோம் என்பதும் இனி அறிவு விளங்கி ஒளிமயமாய் இன்புற்று வாழுவோம் என்பதும் தெரிக்கப்பெற்றன. முந்தின இருள்மயமான நிலைக்கும் இனியெய்தும் ஒளிமயமான நிலைக்கும் இடையிலுள்ளதே இவ்வுலக வாழ்க்கை. இதுவே தனு கரண புவன போகங்கள் பொருந்திய வாழ்க்கை. இதுவே இனியெய்தும் பேரின்ப வாழ்க்கையைத் தருவது. இதனாலேயே இவ்வுலகப் பொருட்கள் விழுப் பொருள்களாகின்றன, சிறந்த பொருள்களாகின்றன. இனிய பொருள்களாகின்றன.

விழுமப்பொருள் இதுவென்பது

* * *

.... சைவசீலன் ....

எழுதுவது

* * *

ஆன்மா இருள்நீங்கி ஒளி பெறுதற்கு உதவுவதால் தநு கரண புவன போகங்கள் முதலிய மாயைப் பொருள்கள் விழுமமுடையவாய நல்லனவாய முன்னர்க் கண்டோம். அவ்வாறு எஞ்ஞான்றும் யாவருங் காண்பதில்லை. அவ்வாறு காணுதவிடத்தில் அவை துன்பந்தரும் விழுமப் பொருட்களாகும். என்னே? மாயை மயக்கந் தருவ தெனப்படும். இவ்வுலக போகப் பொருட்கள் இன்பந் தருவன போலத் தோன்றித் துன்பத்தையே தரும். அவற்றின் ஆக்கத்துக் குழைதலுந் துன்பம். ஆக்கியபின் அவற்றைக் காத்தலுந் துன்பம். காத்துவரும் பொழுதவை அழியக்காண்டலுந் துன்பம். அவை ஒருபுடையழிவதும் ஒருங்கேயழிவதுமாகும். இவையெல்லாவற்றானும் எமதுடலே தலையாயது. உடல் வேறு நாம வேறு என்று நினையாது வாழும் தன்மையைத் தருவது. எமனேறவரும் பொழுது ஆதவனைக் கண்ட பனிபோலேகுந் தன்மையது. "புன்னுனிமே னீர்போ னிலையாமையென்றெண்ணி — இன்னினியே செய்கவறவினை — இன்னினியே — நின்றானிருந் தான் கிடந்தானறன் கேளலறச் — சென்றானெனப் படுதலால். (நாலடியார்) இப்பொழுது இங்கே நின்றான் இருந்தான் கிடந்தான் தன் சுற்றத்தாரலற இறந்தான் என்று சொல்ல இவ்வுலகில் நாம்காண்டலின் புல்லினது நுனியிலுள்ள பனிநீரையொத்த நிலையாமை யுடையது இவ்வுடல் என்று நினைத்து இப்பொழுதே அறஞ் செய்வாயாக என்னும் பொருளைத் தரும். இதனைக் "கருவினுள் அழிவதாயுங் கழிந்திடா தழிவதாயும் = பரிணமித்தழிவதாயும் பாலனாய் அழிவதாயும் = தருணனாய் அழிவதாயும் தானரைத்தழிவதாயும் = உருவமே யழிவே யானால் உள்ளபோதே பார் உய்ய" (சிசி) என்று வழிநூலார் வகுத்திருத்தலுங் காண்க. உடல் முதலிய பொருட்களெல்லாம் இத்தகையனவென்று கண்டாராகலினன்றோ மின்னினும் நிலைமை யில்லா விழுப்பொருள் உளவும் வேண்டேனென்று மணிவாசகப் பெருமான் விண்ணப்பஞ் செய்தனர்.

நாம் செயற்பாலது இதுவென்பது

இவ்வாறு மணிவாசகப் பெருமான் விண்ணப்பஞ் செய்து "உன்னடி யடைந்தாரோடே உறுபவ மொழிதல் வேண்டும்" என்று தொடர்ந்து வேண்டினாராகலின் அவரது திவ்விய சரிதையை வருடந்தோறும் முறை பிறழாது படித்துப் பயன் சொல்லிக் கேட்டு வருகின்ற சைவமக்களாகிய நாம் அவற்றைச் சிந்தித்துத் தெளிந்து தெளிந்தபடி ஒழுகாதொழிவோமாயின் எம வாழ்வை வீணாய்க் கழிப்பவராவோம். எனவே எமதுடல் முதலிய உலகப் பொருட்களெல்லாம் நிலையில்லாதன, துன்பம் விளைப்பன என்றறிந்து இவை தரும் இன்பமெல்லாம் அண்டேல் அது துறையடி சேரும் நெறிக்கு இட்டுதலையாமென வுணர்ந்து "கற்றதனாலாயபயனென்கொலோ — வாலறிவ—னற்றாடொழாஅரெனின்" என்றதனுற்றதை எம் உள்ளத்திருத்தி எம உயிர்க்குயிராய் உறுதுணையாய் உவந்தருள் புரியும் சிவபரம்பொருளின் திருவடித்தாமரை நிலையுடைய ஒல்லும் வகையால் அருள்வழி நின்றொழுகுவோமாக.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இலக்கம் 7496 D.C.J.

வண் – மேற்கு
மீறான் மொகிதீன் மொகமெட்
மீருலபேக்கு
வண் – மேற்கு
குப்பைபிச்சை மொகமெட்
சுல்தானுடைய பட்சத்தில்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 7496ம் இலக்கத்திலே சேர்ந்த தீர்வையின்பிரகாரம் 5407 - ம் இலக்க சுட்டின்போால் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்வரும் ஆதனத்தை 1952 ம் ஆண்டு மாசி மீ 23 உ பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி யாழ்ப்பாணக்கோவிற்பற்று வண்ணை மேற்கு இறை "பிச்சைக்குளத்தானைமடை" சிர 1⅛ ம் வீடும் கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு யூசோவ் மெயிக் மொகமெட்டும் பங்காளரும் வடக்கும் மேற்கும் ஒழுங்கைகள், தெற்கு மிறுசைம் பெண் அன்சியா உம்மாவும் மற்றபேரும் - இதடங்கலும.

S. RATNASABAPATHY,
Commissioner of Sales.
Jaffna,
15 1-52.
(M. 185 18—1—52)

அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

செய்வது பெரும் வியப்பைக் கொடுக்கின்றதே! தாய் பிச்சை எடுக்கத் தம்பி கும்பகோணத்தில் அன்னதானஞ் செய்தாங்கு இன்றைய அரசியல்நிலை இருக்கின்றதை நினைத்து ஆர்தான் ஆச்சரியப் படார்.

தமிழ்மொழிப் பிரேரணை

யாழ்ப்பாண நகரசபைக் கருமம் தமிழ் மொழியில் நடத்தவேண்டுமென்று அடுத்த கூட்டத்தில் திரு. சி. துரைசிங்கம் அவர்கள் ஒரு பிரேரணை பிரேரிப்பார்

விளம்பரம்

நெல் விற்பனவு

வடமாகாணம் யாழ்ப்பாணத்திலுள்ள கீழ்க் காட்டப்படும் உணவுக் கட்டுப்பாட்டு நிலையங்களிலுள்ள ஆயிரத்து ஐந்நூற்று எழுபத்தாறு புசல் ஒன்பது கொத்து (1576 பு. 09 கொ.) நெல்லில் ஒரு பகுதி அல்லது முழுவதையும் வேண்டுபவர்களாகிய இலங்கை வாசிகளிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்களைக் கொழும்பு இருவுகிப் பகுதி ரெண்டர் போட் தலைவர் 1952 ம் ஆண்டு மாசி மாதம் 5 - ந் திகதி (5-2-52) செவ்வாய்க்கிழமை நடுப்பகல் 12 00 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்வார்:-

உணவுக்கட்டுப் பாட்டுநிலையம்	புசல் கொ.
1 பருத்தித்துறை	1503-23
,, ,, 2. சிட்டகசித்தெரு யாழ்ப்பாணம்	72-18
மொத்தம்:-	1576-09

2 இலங்கையிலுள்ள எந்தக் கச்சேரியிலாவது ஐம்பது ரூபா (50/-) கட்டிக் கச்சேரிப் பற்றுச் சீட்டைக் காட்டி வடமாகாண ஏஜண்டரிடம் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் 1952ம் ஆண்டு தை மாதம் 21ந் திகதி (21-1-52) திங்கட்கிழமை நடுப்பகல் 12 - 00 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏனைய விபரங்களை வடமாகாண ஏஜண்டரிடம் அறியலாம்.

(ஒப்பம்)
ஏ. ஆர். மைக்கேயீசர்
யாழ்ப்பாண ஏஜண்டருக்காக.
கச்சேரி,
யாழ்ப்பாணம்
10—1—52.
G. 52 18—1—52.

தமிழ்ப்புலவர்சரித்திரம்

சுன்னாகம்
அ குமாரசாமிப்புலவர் இயற்றியது
(இரண்டாம் பதிப்பு)

பல புதிய புலவர்களின் சரித்திரங்கள் அடங்கியது

விலை ரூபா **5-00**

புலவரகம் மயிலணி
சுன்னாகம் P. O.

M. 183 18, 25, 1—2—52.

உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 20—1—52——26—1—52

மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

எவ்வித விசேஷ மாற்றம் செய்வதற்கும் இந்த வாரம் தாமதிக்க வேண்டாம், ஆனால் புதன் கிழமைக்கு முன் எல்லா வற்றையும் பேசிப் பொருத்திக்கொள்ளவும் திங்கள் இரவு செவ்வாய் புதன் விழிப்பாய்க் கழிக்க வேண்டும். சொந்த விஷயத்துக்கும் வியாபார விஷயங்களுக்கும் வாரமிகுதி நன்று.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

புதுமுயற்சித் தொடக்கங்களுக்கு வார முற்பகுதி நன்று. வியாழன் வெள்ளியும் சனி காலையும் விழிப்பாய்க் கழிக்க வேண்டும். செட்டிகளுக்கு அலைந்து சொடிய சோதிக்கு இடமுண்டு.

மிதுனராசி மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

வியாபார முயற்சிக்கு இந்த வாரத்தின் கடைசி நாள் ஒன்று தவிர மற்றநாட்கள் நல்லன. பணஞ் சம்பாதிக்கலாம். ஆனால் தேகசுகம் தொந்தரவுள்ளதாயிருக்கும். சனிக்கிழமையைக் கவனமாய்க் கழிக்கவும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

வியாபார முயற்சிகளில் சில [illegible] குடும்பவிஷயங் சில நாட்களுக்குக் கஷ்டமாயிருக்கக்கூடும், வார இறுதியில் கற்றோர் விஷயங்கள் கவனமாய்ச் செய்ய வேண்டும்.

சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

இந்த வாரம் ஒரு சிறு பிரயாணத்துக் கிடமுண்டு. சாதாரண யாத்திரங்களால் லாபமுண்டாகலாம். வார இறுதியில பணவரவும் கீர்த்தியும் நிச்சயம்.

கன்னிராசி உத்திரம் 2 3,4ம் பாதம அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

சமூக வாழ்க்கையில் இன்பத்துக் கிடமுண்டு. வார இறுதிக்கு முன் குடும்பப் புது அமைப்புகளுக்கிடமுண்டு புதுத் தொடர்புகளால் பின்னுக்கு அதிக நன்மையுண்டு. வார இறுதிக்கு முன் காசு நெருக்கடி அடியற்றுப்போம்.

துலாம் சித்திரை 3,4ம் பாதம சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம.

தேவை யில்லாதவர்கள் வந்து இந்த வாரம் பெரும் பணச் செலவுண்டாக்கக் கூடும். வண்டிகள் காரணமாய் மனச் சலனத்துக்கும் தொந்தரவுக்கு மிடமுண்டு. வார இறுதியில சட்ட விரோதமான முயற்சிகளில் ஈடுபடா தொழிக.

விருச்சிகராசி விசாகம் 4 - ம் பாதம அநுஷம், கேட்டை.

குடும்ப விஷயங்கள் ஒழுங்கு பண்ணுதற்கு நல்ல வாரம். புது முயற்சிகள் விரும்பிய நன்மையைத் தரும். பணவரவும் கீர்த்தியும் நிச்சயம்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சில ஒழுங்குகள் பிழைத்தற்கு இந்த வாரத்தி லிடமுண்டு. புதுத் திட்டங்கள் சிறிது காலத்துக்குப் பின்போடவேண்டும், வார இறுதியில் மாறுபங்க முண்டாகாமல் விழிப்பாயிருக்கவும்.

மகரராசி உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

வாரம் முழுதும் பெருமுயற்சியாயிருக்கும். இப்பொழுது செய்வதுடன் புது முயற்சிகள் தொடங்கக்கூடும் செய்த ஒழுங்கின்படி முன்னேறுக. வார இறுதியில் அவசிய தீர்மானங்கள் செய்ய வேண்டி வரக்கூடும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

இனத்தவர் அல்லது நண்பர் இந்த வாரம் பெருஞ் செலவுண்டாக்கக் கூடும். தொழில் முறையில் நன்மைக்கிடமுண்டு. வார இறுதியில் எதிர்பாராத லாபம் நிச்சயம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

பெண்ணினை நண்பர்களாலும் இனத்தவர்களாலும் காத்திருந்ததிலும் கூடிய வசதிக்கிடமுண்டு. புது முயற்சிகளை முன்னேற்றுக. வார இறுதியில் பணவரவு நிச்சயம்.

ஒப்பிலா நாவலர் பெருந்தகையின் உள்ளக் கிடக்கை

1-ம் பக்கத்தொடர்ச்சி

எனக்கு ஒழிவுள்ள காலத்தைக் கைம்மாறு வேண்டாது உலகத்தாருக்குப் பயன்படக் கழித்தல் வேண்டும் என்று நினைந்து, விசுவாவசு௵ தை௴ முதலாகச் சில பிள்ளைகளுக்கு இராத்திரியிலும் காலையிலும் தமிழ்க்கல்வி கற்பித்துக்கொண்டு வந்தேன்.

என்னோடு இங்கிலீஸ் கற்றவர்களுள்ளே சிலர், சைவசமயம் சற்சமயம் என்றும், கிறீஸ்து சமயமே சற்சமயம் என்றும் நினைந்து, கிறீஸ்து சமயத்திலே பிரவேசிக்கப் புகுந்தார்கள். அதனை நான் அறிந்து பரிதபித்து 'நீங்கள் சைவசமயத்தன்மையை ஆராயாது பரமதப்பிரவேசஞ் செய்தல் தகாது' என்று கண்டித்து என்னுடைய சிற்றறிவுக்குத் தெரிந்தமட்டும் சைவசமயத்தன்மையை அவர்களுக்குப்போதித்தேன். அதனால் அவர்கள் தங்கள் கருத்தை மீட்டுச் சைவசமயத்திலே சிரத்தையுடையர்கள் ஆயினர்கள். அதுகண்ட நான் சைவசமயத்தன்மையை அறியாமையினாலன்றோ நம்முடைய தேசத்தார்களுள் அநேகர் பரமதப் பிரவேசஞ் செய்கின்றார்கள், பரமதத்திலே பிரவேசியாதவர்களும்பெரும்பான்மையும் சைவசமயக் கிரமங்களை அறியாதவர்களாய் இருக்கின்றார்கள், ஆதலால் நம்முடைய சமயத்தன்மையை நம்மவர்களுக்குப் போதித்தலின் மிக்க புண்ணியம் பிறிதில்லை' என்று தெரிந்து, வண்ணார்பண்ணையில் மகாப்பிரபுவாகிய வைத்திலிங்கச் செட்டியாராலே கட்டுவிக்கப்பட்ட வைத்தீசுரன் கோயிலிலே சுக்கிர வாரந்தோறும் இராக்காலத்திலே சைவப்பிரசங்கஞ் செய்ய விரும்பி, கலியப்தம் ௪௯௪௯க்கும் சாலிவாகன சகாப்தம் ௧,௭௭௦க்கும் சமமாகிய பிலவங்க௵ மார்கழி௴ ௧௮௳ சுக்கிரவாரமும் சுவாதி நக்ஷத்திரமுங்கூடிய தினத்திலே பிரசங்கம் ஆரம்பித்தேன். என்னுடைய நண்பர்களுள் ஒருவராகிய வேங்கடாசலையர் குமாரர் கார்த்திகேசையர், என்னைப் போலவே தாமும் கைம்மாறு வேண்டாது எனக்குத் துணைவராகி, இடையிடையே பிரசங்கஞ்செய்துகொண்டு வந்தனர். இப் பிரசங்கம் வெகு சனங்களுக்குப் பயன் பட்டமை எல்லாருக்கும் இனிது விளங்கும்.

பின்பு, ஒரு வித்தியாசாலை தாபிக்கவேண்டும் என்றும் அதனை நடத்தும்பொருட்டுப் பிறருக்கு வருத்தம் நிகழாவண்ணம் பொருள் பெறுதலே உத்தமநெறி என்றும், அந்நெறி 'பிடியரிசி' தண்டுவித்தலே என்றும், நினைந்து அதற்கு வேண்டும் முயற்சிகளை ஆரம்பித்தேன். இப் பிடியரிசி தண்டுவித்தற் கருமத்தில் கைம்மாறு வேண்டாது மிக்க பிரயாசத்தோடு முயற்சி செய்தவர்கள் என் மாணாக்கர்களுள் மு. சுவாமிநாதையர் இ. விசுவநாதையர் க. சதாசிவப்பிள்ளை என்னும் மூவர்கள். இவர்களுள்ளே சுவாமிநாதையருடைய முயற்சியே மிகப் பாராட்டற்பாலது. கலியப்தம் ௪௯௫௦க்கும் சாலிவாகன சகாப்தம் ௧,௭௭௧க்கும் சமமாகிய கீலக௵ ஆவணி௴ ௨௳ சுக்கிர வாரமும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியும் ரேவதி நக்ஷத்திரமும் சூலநாமயோகமும் பாலவகரணமுங்கூடிய சுபதினத்திலே விருச்சிக லக்கினத்திலே வண்ணார்பண்ணையிலே சைவப்பிரகாச வித்தியாசாலை எனப் பெயர் கொண்ட ஒரு பள்ளிக்கூடம் தாபித்தேன். இது ஏழு மாசமாக வைத்தீசுவரன் கோயிலுக்கு எதிரே உள்ள புலோலிச் சகநாமூர்த்திச் செட்டியார்வீட்டிலும், பின்பு வாடகைக்கு வாங்கப்பட்ட வைத்தீசுரன் கோயில் மடத்திலும் வைக்கப்பட்டது.

எனக்கு இங்கிலீஷ் கற்பித்த பீற்றர் பார்சிவல் துரைக்குச் சில வருஷகாலம் தமிழ்ப்பண்டிதனாக இருந்த நான் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலிற்றானே என் வாணாள் முழுதையும் போக்கல்வேண்டும் என்று எழுந்து முறுகி வளர்ந்த பேராசையினாலே கீலக௵ புரட்டாதி௴ அந்த விருத்தியைப் பரித்தியாகஞ்செய்துவிட்டேன். நான் இல் வாழ்க்கையிற் புகாமைக்குக் காரணம் அதுவே.

தருமங்கள் பலவற்றினும் மிக்க முயற்சியுடையவராகிய கு. கதிர்வேற்பிள்ளை இச் சைவப்பிரகாச வித்தியாசாலை எக்காலமும் நிலைபெறும் பொருட்டு மூலதனஞ் சேர்க்க விரும்பி, சௌமிய௵ வைகாசி௴ ரூபா ௯௨ - அணா ௮ சேர்த்து வட்டிக்குக் கொடுத்தனர். பின்பு சில விடையூற்று மிகுதியினாலே அம்முயற்சி தடைப்பட்டது.

வைத்தீசுரன் கோயிலிலே சுக்கிரவாரந்தோறும் நடத்தப்பட்ட சைவப் பிரசங்கம் அக்கோயிலதிகாரி முதலாயினோரால் நடத்தப்பட்ட இடையூற்று மிகுதியினாலே சௌமிய௵ ஆனி௴ தடைப்பட்டது.

வண்ணார்பண்ணை வர்த்தகர்களுள்ளே அதிகௌரவமுடையவராகிய அ. ஆறுமுகச் செட்டியார் நமது வித்தியாசாலையின்பொருட்டுச் சௌமிய௵ ஐப்பசி௴ ௯௳ ஒரு நிலத்தைத் தருமசாதனஞ் செய்து தந்தனர். இதன்பொருட்டு முயன்றவர் அவர் சிநேகிதரும் என் மாணாக்கர்களுள் ஒருவருமாகிய அ. ஆறுமுகச் செட்டியார். மு. சுவாமிநாதையர் க. வேலுப்பிள்ளை என்னும் இருவரும் நல்லூர் வண்ணார்பண்ணையில் உள்ள சில தருமசீலர்களிடத்தே திரவியஞ் சேர்த்து, அந்த நிலத்திலே ஒரு கூடம் கட்டுவித்தார்கள். சாதாரண௵ தை௴ முதலாக வித்தியாசாலை அவ் விடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வித்தியாசாலையிலே நியோகிக்கப்பட்ட உபாத்தியாயர்கள் என் மாணாக்கர்களே யாதலால் அவர்களுள்ளே சிலர் பிடியரிசி வரவினால் அற்பவேதனம்பெற்றும் மற்றவர்கள் வேதனம் சிறிதும் பெறாமல், நான்கு வருஷம் படிப்பித்து வந்தார்கள். பின்பு பிடியரிசி வரவு தண்டற் கூலிக்குத்தானும் போதாமை கண்டுவிட்டபடியால், சில உபாத்தியாயர்கள் நீங்கிவிட, சிலர் வேதனம் இல்லாமலே ஏறக்குறைய ஐந்தரை வருஷம் படிப்பித்து வந்தார்கள்.

ஔதாரிய குணத்திற் சிறப்புற்றோங்கிய இ. நன்னித்தம்பி முதலியார் கொழும்பிலிருந்து நள௵ பங்குனி௴ ௨௦௦ ரூபா அனுப்பினார். அதனை அறிந்த வண்ணார்பண்ணை வர்த்தகர்களுள் இருவர் தனித்தனி ௫௦ ரூபா உபகரித்தார்கள்.

பிங்கள௵ மாசி௴ ௧௪௳ புதவார இராத்திரியில் இவ்வித்தியாசாலையிலே ஒரு சபை கூட்டி, இதன் வரலாற்றைப் பிரசங்கித்தேன். அச் சபையிலே கு. கதிர்வேற்பிள்ளை தாம் சௌமிய௵ வைகாசி௴ சேர்த்த விதரணத்தை வட்டியோடும் என்னிடத்து ஒப்பித்தனர். சபையார்களுள்ளே பலர் உபகரித்த விதரணம் ரூபா ௯௨௧- அணா ௧. காலயுக்தி௵ சித்திரை௴ முதலாக உபாத்தியாயர்கள் வேதனம் பெற்றுக்கொண்டு கல்வி கற்பிக்கின்றார்கள்.

இவ் வித்தியாசாலையின் பொருட்டு வண்ணார்பண்ணையிலே ஒரு வர்த்தகசாலையின் காற்பங்கு காலயுக்தி௵ ஆனி௴ ௧௧௳ தேதியினும் அரைப்பங்கு அவ் ௵ ஐப்பசி௴ ௯௳ தேதியிலும் விலைக்கு வாங்கப்பட்டது.

தற்காலத்தில் இவ்வித்தியாசாலையிலே கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்கள் மூவர். இவர்களுள் ஒருவர் மு. தில்லைநாதபிள்ளை. இவர் என்னோடு இங்கிலீஷ் கற்றவர், என்னிடத்தே சிலகாலம் தமிழ்கற்றவர், இங்கிலீஷ் வித்தியாசாலையிலே சிலகாலம் ஒரு உபாத்தியாயராய் இருந்தவர். இவர் நமது சைவப் பிரகாச வித்தியாசாலை தாபிக்கப்பட்ட காலம் முதலாக இதிலே தமிழுபாத்தியாயராய் இருக்கின்றார். மற்றொருபாத்தியாயர் மா. வைத்திலிங்கம்பிள்ளை. இவர் நெடுங்கணக்கு முதல் இலக்கண இலக்கியங்கள் வரையும் இவ் வித்தியாசாலையிற்றானே கற்றுக்கொண்டு பத்து வருஷகாலம் இதில் உபாத்தியாயராய் இருக்கின்றார். அக்காலத்தில் இவ் வித்தியாசாலையிலே கற்கும்பிள்ளைகள் [illegible].

இவ் வித்தியாசாலையிலே கல்வி கற்றவர்களுள் அநேகர் சிவாநுக்கிரகத்தினாலே யாழ்ப்பாணத்திலும், மறுநாடுகளிலும், ஆசிரியத்துவம், வர்த்தகம், சேவகம் முதலிய தொழில்களினாலே பொருள் சம்பாதித்துக்கொண்டு வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் பொருட்டும் பிறர்பொருட்டும் என்னிளமைப்பயனெல்லாவற்றையும் இழந்தும் பற்பல இடையூறுகளை அநுபவித்தும் இருபது வருஷகாலம் கைம்மாறு வேண்டாது செய்த என் முயற்சிகளைச் சிந்தித்து, இவ் வித்தியாசாலைக்கும் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்வார்களாயின் இவைகள் மிகத் தழைத்தோங்குமே.

யாழ்ப்பாணத்துச் சைவப்பிரகாச வித்தியாசாலை எக்காலமுந் தழைத்தோங்கும்பொருட்டும், இவ் வித்தியாசாலைக்குப் பொருட்கொடையினாலும் மனமுயற்சியினாலும் சரீர முயற்சியினாலும் உதவி செய்யும் புண்ணியவான்கள் பெருவாழ்வை அடையும் பொருட்டும் திருவருள் சுரக்கும்படி பரமகாருண்ய சமுத்திரமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
நல்லூர் - க. ஆறுமுகநாவலர்
[illegible]
[illegible]

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
சன்னுதிட்டி, யாழ்ப்பாணம்

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமயமும் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் ஆராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
கிருப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ரூணிமார்க்ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்.
Std. 2

பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ 1—25ச

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புகளுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்) மேற்படி பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம.-க. வேற்பிள்ளை ஆயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1·00

சைவ சமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45·

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்
Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday, January 18, 1952.